முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2025 சனவரி

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2025-02-01
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம்*** *: வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  - (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  - (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

கணக்கீட்டுத் தொழில் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் சந்திக்கப்போகிறது எனவும் தமது அங்கத்தவர்கள் உட்பட தொழில்சார் நிறுவனங்களும் கல்வி நிறுவனங்களும் அத்தகைய மாற்றங்களுக்கு பதிலளிக்க வேண்டியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(a) கணக்கீட்டுத் தொழிலில் காணப்படுகின்ற மூன்று (03) புதிய போக்குகளை (trends) **அடையாளங் காண்க.**
(03 புள்ளிகள்)

நிதிக் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட மூலகங்கள் (elements) பண அடிப்படையில் அளவிடப் படுவதுடன் அதற்காக அளவீட்டு அடிப்படை ஒன்றைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(b) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, நிதிக் கூற்றுக்களின் மூலகங்களை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் இரண்டு (02) அளவீட்டு அடிப்படைகளைக் **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

சமீப காலத்தில், நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பரமானங்களை ஒருங்கிணைக்கின்ற, ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் ஒரு மிக முக்கிய பகுதியாக நிலைபேறான அறிக்கையிடல் மாறியுள்ளது. ஒருங்கிணைந்த அறிக்கையிடலானது வணிக விழுமியங்கள் மற்றும் ஒழுக்கநெறிகள், நிலைபேறான நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிலைபேறான அறிக்கையிடலின் பிரதான நோக்கத்தைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் மூன்று (03) வழிகாட்டல் கோட்பாடுகளைக் (guiding principles) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** 2024 மார்ச் 31 மற்றும் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான மொத்த இலாப விகிதம் மற்றும் கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் ஆகியன கீழே தரப்பட்டுள்ளன :

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2024 | 2023 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | 28% | 45% |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 128 Days | 65 Days |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) அடுத்துவரும் ஆண்டுகளில் மேற்படி ஒவ்வொரு விகிதங்களையும் மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய சாத்தியமான நடவடிக்கை ஒவ்வொன்றைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(b) விகிதப் பகுப்பாய்வின் மூன்று (03) வரையறைகளைப் (limitations) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

கீழ்வரும் தகவல்கள் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ஒமேகா கம்பனியின்** கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2024 சனவரி 01 இல், கம்பனி ஒரு புதிய பொருளை அபிவிருத்தி செய்வதற்கான சந்தை ஆய்வொன்றை நடத்தியது. இந்த நோக்கத்திற்காக ஆய்வுக் கம்பனியொன்றிற்கு ரூபா 2 மில்லியன் செலுத்தப்பட்டது.

(2) ரூபா 75,000/- ஐச் செலவிட்டு, 2024 மார்ச் 20 இல் பொருளின் காப்புரிமை பதிவு செய்யப்பட்டது.

(3) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியின் முகாமையாளர்களுக்கு வெளிநாட்டில் பயிற்சி வழங்க ரூபா 10 மில்லியனை கம்பனி செலவிட்டிருந்தது. பயிற்சியின் விளைவாக, முகாமையாளர்களின் செயலாற்றுகை மேம்படும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

LKAS 38 – அருவச் சொத்துகள் என்ற நியமத்தின்படி, மேற்படி ஒவ்வொரு கிரயமும் அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்யப்பட முடியுமா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

2024 மார்ச் 31 மற்றும் 2023 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான **வரையறுக்கப்பட்ட சூரியா (தனியார்) கம்பனியின்** நிதி நிலைக் கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட சூரியா (தனியார்) கம்பனி**

**நிதி நிலைக் கூற்றுகள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 இல் | 2024 | 2023 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துகள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 21,500 | 20,100 |
| திரண்ட தேய்மானம் | (2,900) | (2,400) |
| **முன்கொணரற் பெறுமதி** | **18,600** | **17,700** |
| **நடைமுறைச் சொத்துகள் :** | | |
| தொக்குகள் | 16,800 | 5,000 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 5,545 | 18,410 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,050 | 2,200 |
| | **24,395** | **25,610** |
| **மொத்தச் சொத்துகள்** | **42,995** | **43,310** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் (2,500,000 சாதாரண பங்குகள்) | 25,000 | 25,000 |
| கைக்கொள் இலாபம் | 6,600 | 4,100 |
| | **31,600** | **29,100** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 5,400 | 6,000 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு) | 390 | 350 |
| | **5,790** | **6,350** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 5,170 | 7,590 |
| கடன்களுக்காகச் செலுத்த வேண்டிய வட்டி | 435 | 120 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | - | 150 |
| | **5,605** | **7,860** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **42,995** | **43,310** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 2,730,000/- ஆக உள்ளதுடன் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினங்கள் ரூபா 720,000/- ஆகும்.

(2) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி ஒரு புதிய நீண்ட காலக் கடன் ரூபா 2,000,000/- இனைப் பெற்றுக் கொண்டது. 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கடன் மீதான வட்டிச் செலவினங்கள் ரூபா 1,000,000/- ஆகக் காணப்பட்டது.

(3) முற்றாகத் தேய்மானஞ் செய்யப்பட்ட ஒரு இயந்திரத்தை கம்பனி 2023 ஏப்ரல் 01 இல், ரூபா 200,000/- இற்கு விற்பனை செய்தது. இந்த இயந்திரத்தின் கிரயம் ரூபா 700,000/- ஆகும். விற்பனை செய்யப்பட்ட இயந்திரத்திற்குப் பதிலாக ஒரு புதிய இயந்திரம் 2023 ஏப்ரல் 30 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இது அதே திகதியில் மூலதனமாக்கப்பட்டது.

(4) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூபா 230,000/- இடைக்காலப் பங்கிலாபத்தைச் செலுத்தியுள்ளது.

(5) ஆண்டிற்காகச் செய்யப்பட்டுள்ள பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 120,000/- ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

<u>நேரில் முறையைப் பயன்படுத்தி,</u> 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சூரியா (தனியார்) கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

(a) ஊழியர் நன்மைகள் என்பது ஊழியர்களால் வழங்கப்பட்ட சேவைக்காக அல்லது தொழிலின் முடிவுறுத்தலுக்கு ஈடாக ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும் அனைத்து வகையான பிரதிபலனும் ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

குறுங் கால ஊழியர் நன்மைகள் என்பது யாதென இரண்டு (02) உதாரணங்களுடன் **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட பப்ளிக் லீசிங் கம்பனி** 2023 ஏப்ரல் 01 இல் 5 ஆண்டு காலப்பகுதிக்கான நிதிக் குத்தகை உடன்படிக்கை ஒன்றின் கீழ் **வரையறுக்கப்பட்ட சிங்ஹறா கம்பனிக்கு** ஒரு மோட்டார் லொறியை விற்பனை செய்தது. மோட்டார் லொறியின் சீர் மதிப்பு ரூபா 6,800,000/- ஆக உள்ளதுடன் **வரையறுக்கப்பட்ட சிங்ஹறா கம்பனி** 2023 ஏப்ரல் 01 இல் ரூபா 2,000,000/- ஐ முற்பணமாகச் செலுத்தியது. வருடாந்தக் குத்தகைத் தவணைப்பணம் ரூபா 1,534,934/- ஆக இருந்ததுடன் அது ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் செலுத்தப்பட வேண்டும். உள்ளார்ந்த வட்டி வீதம் ஆண்டிற்கு 18% ஆக இருந்தது. குத்தகைக்கான முதலாவது தவணைப்பணம் **வரையறுக்கப்பட்ட சிங்ஹறா கம்பனியால்** 2024 மார்ச் 31 இல் செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

**வரையறுக்கப்பட்ட பப்ளிக் லீசிங் கம்பனியின்** (குத்தகைக்கு விடுபவர்) 2024 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் பேரேட்டுக் கணக்குகளைத் (ledger accounts) **தயாரிக்குக** :

(i) குத்தகை வருமதிக் கணக்கு (Lease Receivable Account) (04 புள்ளிகள்)

(ii) ஈட்டப்படாத நிதி வருமானக் கணக்கு (unearned Finance Income Account) (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனியின்** நிதிக் கூற்றுகள் வழங்கப்படுவதற்காக 2024 யூன் 30 இல் அங்கீகரிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, ஆண்டிறுதியின் பின்னர் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததையும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அவை தொடர்பில் அவதானம் செலுத்தப்படவில்லை என்பதையும் நிதி முகாமையாளர் அவதானித்தார் :

(1) **வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனி** விற்பனை செய்த ஒரு பொருளைப் பயன்படுத்தியதன் பின்னர் ஆரோக்கியம் சீர்கெட்டதற்காக ரூபா 1,000,000/- இழப்பீடு கோரி, கம்பனிக்கு எதிராக வாடிக்கையாளர் ஒருவர் 2024 மார்ச் 31 இல், வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். முன்வைக்கப்பட்டிருந்த சான்றுகளின் அடிப்படையில், 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட திகதி வரை, கம்பனியால் இழப்பீடு வழங்கப்படுவதற்கான சாத்தியத்தன்மை குறைந்தளவே உள்ளது என கம்பனியின் வழக்கறிஞர் நம்பியிருந்தார்.

(2) **வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனியின்** பணிப்பாளர் சபை 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தின் மீது இறுதிப் பங்கிலாபமொன்றை 2024 ஏப்ரல் 10 இல் வெளிப்படுத்தியது.

(3) வருமான வரிப் பரிப்பைக் கணிப்பிடும்போது, கம்பனியால் அனுமதிக்கத்தக்க செலவினங்களாகக் கருத்திற் கொள்ளப்பட்ட ரூபா 2 மில்லியன் செலவினங்களை அனுமதியாது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. பல கலந்துரையாடல்களுக்குப் பின்னர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ரூபா 1.5 மில்லியன் செலவினங்களை அனுமதியாது விடுவதற்கு 2024 ஏப்ரல் 30 இல் இணங்கியது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் என்ற நியமத்தின்படி, 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனியின்** நிதிக் கூற்றுக்களில் மேற்படி ஒவ்வொரு நிகழ்வையும் ஏற்பனவு செய்ய முடியுமா என்பதை **விபரிக்கக.** (05 புள்ளிகள்)

(b) LKAS 23 – கடன்பெறுகைக் கிரயம் என்ற நியமத்தின்படி, தகைமைச் சொத்துகள் மீது செலவழிக்கப்பட்ட கடன்பெறுகைக் கிரயத்தை மூலதனப்படுத்த முடியும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(i) LKAS 23 – கடன்பெறுகைக் கிரயம் என்ற நியமத்தின்படி, “தகைமைச் சொத்து” என்னும் பதத்தை ஓர் உதாரணத்துடன் **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) LKAS 23 இன்படி, கடன்பெறுகைக் கிரயத்தின் மூலதனப்படுத்தலைத் தொடங்குவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு நிபந்தனையைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழ்வரும் பரீட்சை மீதி 2024 மார்ச் 31 இலான **Safe Wheel PLC** இன் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது :

**Safe Wheel PLC**

**2024 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (30,000,000 சாதாரண பங்குகள்) | | 300,000 |
| 2023 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 51,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணியும் கட்டடமும் (காணியின் கிரயம் - ரூபா 90 மில்லியன்) | 126,000 | |
| இயந்திரம் | 60,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 12,000 | |
| **2023 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :** | | |
| கட்டடங்கள் | | 15,000 |
| இயந்திரம் | | 18,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 5,000 |
| சொத்துக்கள் விற்பனைக் கணக்கு | | 5,500 |
| மூலதனப் புத்துருவாகும் வேலை | 95,000 | |
| 2024 மார்ச் 31 இல் தொக்கு – கிரயத்தில் | 94,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 91,000 | 24,000 |
| கையில் உள்ள காசு / வங்கி மேலதிகப்பற்று | 38,000 | 12,000 |
| 2023 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகை | | 16,500 |
| நீண்ட காலக் கடன் | | 50,000 |
| செலுத்திய வருமான வரி | 10,000 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனைகள் | 161,000 | 317,000 |
| ஏனைய வருமானம் | | 1,500 |
| முற்கொடுப்பனவுகள் | 3,600 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 15,000 | |
| நிருவாகச் செலவினங்கள் | 68,500 | |
| விநியோகச் செலவினங்கள் | 33,400 | |
| நிதிச் செலவினங்கள் | 8,000 | |
| | **815,500** | **815,500** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2021 அக்டோபர் 01 இல் ரூபா 6,000,000/- இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் 2024 மார்ச் 31 இல், ரூபா 5,500,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வருமானமானது காசுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, சொத்து விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதுடன் இது தொடர்பில் கணக்கேடுகளில் வேறு பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 50 ஆண்டுகள் |
| இயந்திரம் | : | 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 04 ஆண்டுகள் |

(3) கம்பனி 2024 மார்ச் 31 இல் இயந்திரத்திற்கான சேத இழப்புச் சோதனையை நடத்தியது. அதில் இயந்திரத்தின் சீர் மதிப்பு கழித்த விற்பனைக் கிரயம் ரூபா 30,000,000/- எனக் கண்டறியப்பட்டது. இயந்திரத்தின் பயன்பாட்டுப் பெறுமதி ரூபா 34,000,000/- ஆகும். இந்த சேத இழப்பு பற்றிக் கணக்கேடுகளில் எவ்வித சீராக்கமும் செய்யப்படவில்லை.

(4) கம்பனி 2023 யூன் 01 இல் அதன் புதிய தொழிற்சாலைக் கட்டடத்தின் நிருமாணத்தை ஆரம்பித்தது. அதனை நிறைவு செய்து, 2024 யூன் 30 இல் செயல்பட வைக்க எதிர்பார்க்கப்பட்டது. நிருமாணத் திற்காகச் செலவிடப்பட்ட கிரயம், மூலதனப் புத்துருவாகும் வேலைக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டது. 2023 யூலை 01 இல், கம்பனி ஒரு உள்நாட்டு வங்கியில் இருந்து 15% வருடாந்த வட்டி வீதத்தில் ரூபா 50 மில்லியன் கடனைப் பெற்றுக் கொண்டது. அந்தத் கடன் தொகை முழுவதும் நிருமாணத்திற்காகவே பயன்படுத்தப்பட்டது. கடனானது 60 சமமான தவணைக் கட்டணங்களாக மீள் செலுத்தப்படும் என்பதுடன் கடனின் மூலதன மீள்கொடுப்பனவுகள் 2024 ஏப்ரல் 01 இலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. ஆண்டுடன் தொடர்புடைய வட்டி, நிதிச் செலவினங்களுக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

(5) முன்னைய நிதியாண்டில் நிருவாகச் செலவினங்களுக்குப் பதிவழிப்புச் செய்யப்பட்ட அறவிடமுடியாக் கடன் ரூபா 1,400,000/- ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியால் வசூலிக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகை வியாபார வருமதிகள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், 2024 மார்ச் 31 இல் உள்ள வியாபார வருமதிகள் மீதியில் 5% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேண, முகாமையால் தீர்மானிக்கப்பட்டது.

(6) 2023/2024 நிதியாண்டுடன் தொடர்புடைய கணக்காய்வு மற்றும் வரி ஆலோசனைக் கட்டணங்கள் முறையே ரூபா 800,000/- மற்றும் ரூபா 500,000/- ஆக இருந்ததுடன் அவை 2024 யூன் மாதம் செலுத்தப்பட்டன. எவ்வாறாயினும், இவை 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கணக்கிற் கொள்ளப்படவில்லை. முற்கொடுப்பனவுக் கணக்கானது 2024 நாட்காட்டி வருடம் முழுமைக்குமாகச் செய்யப்பட்ட வாடகைக் கொடுப்பனவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(7) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான, நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் ரூபா 250,000/- ஆனது 2024 ஏப்ரல் 02 இல் கிடைக்கப் பெற்றது. இது 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகப் பதிவு செய்யப்படவில்லை.

(8) 2023 மார்ச் 31 இல் அட்டுறுவான அல்லது முன்-செலுத்திய வருமான வரிப் பரிப்பு எதுவுமில்லை என்பதுடன் 2023/24 வரிமதிப்பாண்டிற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 12,450,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டது. 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப் பகுதியில் செய்யப்பட்ட வருமான வரிக் கொடுப்பனவுகள் "செலுத்திய வருமான வரி"க் கணக்கிற்கு தாக்கல் செய்யப்பட்டன.

(9) சாதாரண பங்குதாரர்களுக்கு 2024 சனவரி 01 இல் ரூபா 15,000,000/- இடைக்காலப் பங்கிலாபம் செலுத்தப்பட்டது. மேலும், 2024 மே 21 இல் நடைபெற்ற கூட்டத்தில் பங்கொன்றிற்கு 50 சதம் என்ற அடிப்படையில் இறுதிப் பங்கிலாபமொன்றை வழங்க கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2024 யூன் 30 இல் பணிப்பாளர் சபை அங்கீகாரம் அளித்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவத்தில், **Safe Wheels PLC** இற்காகக் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(c) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பான கூற்று. (03 புள்ளிகள்)

(d) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

2024 மார்ச் 31 மற்றும் 2023 மார்ச் 31 ஆகிய திகதிகளில் / முடிவடைந்த ஆண்டுகளுக்கான **சக்தி பீ.எல்.சீ.** இன் ஏடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2024 (ரூபா'000) | 2023 (ரூபா'000) |
|---|---|---|
| விற்பனைகள் | 1,683,700 | 1,487,900 |
| விற்பனைக் கிரயம் | (1,321,800) | (1,286,700) |
| மொத்த இலாபம் | 361,900 | 201,200 |
| வட்டிச் செலவினம் | (17,540) | (16,280) |
| வருமான வரி | (13,800) | (14,250) |
| வரிக்குப் பின்னரான நிகர இலாபம் | 136,450 | 119,820 |
| **மார்ச் 31 இல்** | **2024** | **2023** |
| நடைமுறைச் சொத்துகள் | 899,500 | 1,149,200 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 121,900 | 119,800 |
| வியாபார வருமதிகள் | 541,500 | 419,800 |
| வியாபார சென்மதிகள் | 115,720 | 110,910 |
| தொக்கு | 111,400 | 109,600 |
| வட்டி தாங்கும் கடன்கள் | 51,470 | 56,420 |
| பங்குதாரர்களின் உரிமையாண்மை | 167,850 | 31,400 |
| வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை ('000) | 19,500 | 19,500 |

மொத்த விற்பனையில் 60% ஆனவை கடன் அடிப்படையிலான விற்பனையாக இருப்பதுடன், 90% ஆன கொள்வனவுகளும் கடன் அடிப்படையிலானவை ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2024 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் விகிதங்களைக் **கணிப்பிடுக** :

(i) மொத்த இலாப விகிதம் (Gross Profit Ratio).

(ii) நிகர இலாப விகிதம் (Net Profit Ratio).

(iii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் (Debtors' Collection Period).

(iv) கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் (Creditors' Settlement Period).

(v) பங்கொன்றின் வருவாய் (Earning Per Share). (05 புள்ளிகள்)

(b) **சக்தி பீ.எல்.சீ.** செயற்படுகின்ற தொழில்துறையில், தொழில்துறைச் சராசரி விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| மொத்த இலாப விகிதம் | 44% |
| நிகர இலாப விகிதம் | 12% |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 105 நாட்கள் |
| கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் | 65 நாட்கள் |
| பங்கொன்றின் வருவாய் | ரூபா 7.50 |

முரண்களுக்கான சாத்தியமான காரணங்களை விபரித்து, **சக்தி பீ.எல்.சீ.** இன் மேற்படி விகிதங்களை தொழில்துறைச் சராசரிகளுடன் ஒப்பிட்டு, பொழிப்பு அறிக்கை ஒன்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 10

**Enrich PLC (EN)** ஆனது 2023 ஏப்ரல் 01 இல் **Kanrich PLC (KN)** இன் 80% சாதாரண பங்கு மூலதனத்தை ரூபா 65 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தது. 2024 மார்ச் 31 இலான **EN** மற்றும் **KN** ஆகியவற்றின் நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா'000)*

| 2024 மார்ச் 31 இல் | Enrich PLC | Kanrich PLC |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துகள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 90,000 | 60,000 |
| KN இல் முதலீடு | 65,000 | - |
| **நடைமுறைச் சொத்துகள் :** | | |
| தொக்குகள் | 12,000 | 18,000 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 18,000 | 17,000 |
| KN இடமிருந்தான நிலுவைத் தொகை | 2,000 | - |
| காசும் காசுச் சமானங்களும் | 6,000 | 2,500 |
| | 38,000 | 37,500 |
| **மொத்தச் சொத்துகள்** | **193,000** | **97,500** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 120,000 | 70,000 |
| கைக்கொள் இலாபம் | 26,900 | 12,000 |
| | 146,900 | 82,000 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| ஊழியர் நன்மைகள் | 7,500 | 3,100 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 32,000 | 9,050 |
| EN இற்கான நிலுவைத் தொகை | - | 2,000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 6,600 | 1,350 |
| | 38,600 | 12,400 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **193,000** | **97,500** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) கொள்வனவுத் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் (NCI) சீர் மதிப்பு ரூபா 20 மில்லியனாக உள்ளதுடன் **KN** இன் இனங்காணத்தக்க நிகரச் சொத்துகளின் சீர் மதிப்பு அதன் புத்தகப் பெறுமதிக்குச் சமனாக உள்ளது. கொள்வனவுத் திகதியில், **KN** இன் கைக்கொள் இலாபம் ரூபா 4,500,000/- ஆக இருந்தது.

(2) 2023 ஏப்ரல் 01 இல், **EN** ஆனது **KN** இற்கு ரூபா 3,000,000/- பெறுமதியான இயந்திரம் ஒன்றை விற்பனை செய்தது. இது, அந்தத் திகதியில் **EN** இன் ஏட்டில் ரூபா 2,000,000/- முன்கொணரற் பெறுமதியைக் கொண்டிருந்தது. 2023 ஏப்ரல் 01 இல் இயந்திரத்தின் எஞ்சிய பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருந்தது. இயந்திரத்தின் விற்பனை மீதான இலாபம் **EN** இன் ஏனைய வருமானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(3) ஆண்டின் காலப்பகுதியில், **KN** ஆனது **EN** இடமிருந்து ரூபா 6,000,000/- பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்தது. இந்தப் பொருள்களில், ஐந்தில் ஒரு பகுதி (1/5) இன்னும் விற்பனை செய்யப்படாது **KN** இன் வளாகத்தில் எஞ்சியுள்ளது. **EN** இன் விற்பனை தொடர்பான கொள்கை ஆனது கிரயத்தில் 20% இலாபத்தைப் பேணுவதாகும். மேலும், இந்தப் பரிவர்த்தனை மீது செலுத்த வேண்டிய ரூபா 2 மில்லியன் தொகையானது 2024 மார்ச் 31 இலான **EN** இன் வருமதிகள் மற்றும் **KN** இன் சென்மதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(4) 2024 மார்ச் 31 இல் மேற்கொள்ளப்பட்ட சேத இழப்புச் சோதனையானது கொள்வனவு மீதான நன்மதிப்பு ரூபா 6,000,000/- இனால் சேத இழப்பு அடைந்திருப்பதை வெளிப்படுத்தியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Kanrich PLC** இன் கொள்வனவினால் ஏற்படும் நன்மதிப்பைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இலான ஒருங்கிணைந்த நிதி நிலைக் கூற்றைத் **தயாரிக்குக.** (11 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது. தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |